
LIBRARIAN'S OFFICE
RECEIVED
13 DEC 2013
LIBRARY
UNIVERSITY OF JAFFNA

2013 டிசம்பர்
அணி 09 படை 07
நன்கொடை ரூபா 20.00

# செஞ்சக்தி

மக்கள் விடுதலை முன்னணியின் உத்தியோகபூர்வ செய்தித்தாள் செய்தி பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது


### இளைஞர் யுவதிகளை ராஜபக்ஷ மயமாக்கலிலிருந்து விடுவிக்க வேண்டும்




சோஷலிச இளைஞர் சங்கத்தின்
தேசிய அமைப்பாளர் – பிமல் ரத்நாயக்க

பக்கம் 04

### 'பொதுநலவாய' மாநாடும் சர்வதேச பொறியும்



பக்கம் 04

### 09 வது மாநாட்டில் தடம் பதிக்கும்

அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கம்



பக்கம் 06

## பொறுத்தது போதும் - கொள்ளையை ஒழிப்போம்




ராஜபக்ஷ அரசாங்கம் சமர்ப்பித்த வரவு செலவு திட்டத்தில் மக்கள் நலத்திட்டங்கள் எதனையும் கானமுடியவில்லை. அதற்கு மாறாக மக்களை மறைமுகமாக ஏமாற்றும் வரவு செலவு திட்டமாகும். மக்களை ஏமாற்றும் வரவு செலவு திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தபோது அதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், நிராகரித்தும்,கண்டித்தும் மக்கள் விடுதலை முன்னணி கடந்த 25ம் திகதி கொழும்பில் பாரிய கண்டன எதிர்ப்பு பேரணியை நடத்தியது. எதிர்ப்பு பேரணியில் கலந்துக் கொண்ட மக்கள் வெள்ளத்தையே படத்தில் கான்கின்றீர்கள்.

# அரசின் தேர்தல் வரைப்படத்தில் மீண்டும் மாற்றம்!

ராஜபக்ஷவின் அரசாங்கம் அவசரமாக ஜனாதிபதித் தேர்தலுக்கான பணிகளை முன்னெடுத்து வருகிறதென்று இதற்கு முன்னர் நாம் வெளிப்படுத்தியிருந்தோம். நாடு முகம்கொடுத்திருக்கும் பாரிய பொருளாதார சமூக நெருக்கடியினால் பாதிப்புக்குள்ளாகும் மக்களின் எதிர்ப்பு அதிகரிப்பதற்கு முன்னர் அவசரமான ஜனாதிபதித் தேர்தலை நடத்தி மேலும் 06 வருடத்திற்கு தமது அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்வதே ஜனாதிபதியின் நோக்கமாக இருந்தது.



அதாவது ஜனாதிபதி ஆரம்பத்தில் மேல் மாகாணம் மற்றும் தென்மாகாண சபைத் தேர்தலை நடத்தி அதன் பின்னர் ஊவா மாகாண சபைத் தேர்தலை நடத்தி 2015 முற்பகுதியில் ஜனாதிபதி தேர்தலை நடத்துவதாகவே எண்ணியிருந்தார். ஆனால் அதில் மீண்டும் மாற்றத்தை செய்த ஜனாதிபதி, கடந்த நவம்பர் மாதம் முற்பகுதியில் அனைத்தையும் பின்தள்ளி வருட முற்பகுதியில் ஜனாதிபதித் தேர்தலுக்கு செல்வதென நினைத்திருந்தார். பொதுநலவாய தலைமை பதவியால் கிடைத்த மகுடத்தின் சாயம் போகும் முன்னர் ஜனாதிபதித் தேர்தலுக்கு செல்வதே அவரது நோக்கமாக இருந்தது. அதன் காரணமாகவே பொதுநலவாய மாநாட்டு விளம்பரத்தை ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரமாக முன்னெடுத்தார். அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் மாதமான மார்ச் மாதம் வரும் நன்னாளில் சாதகம் பார்த்ததாகவும் யாப்பிற்கு நீதிமன்றத்தில் ஆலோசனைகளை பெறுவதற்கு (4 வருடம் ஆகு முன்னர் தேர்தலுக்கு செல்வதற்கு) முடிவாகியிருப்பதாக மன்னர் மாளிகை தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் இப்போது ஜனாதிபதி மீண்டும் தனது நிலைபாட்டை மாற்றியுள்ளார். அதற்கிணங்க அடுத்த வருடம் முற்பகுதியில் மேல்மாகாண சபைத் தேர்தலை மட்டும் நடத்தி. தெற்கு மற்றும் ஊவாவை வருட நடுப்பகுதியில் நடத்த ஏற்பாடுகள் நடந்தேறுகின்றன. அதற்கான காரணம் தெற்கில் அரசாங்கத்தின் நிலை ஆபத்தானது எனவும் தேர்தலுக்கு செல்வதற்கு முன்னர் மக்களை வென்றெடுப்பதற்காக ஜே.வி.பி அதற்கு கூடுதல் அவதானம் செலுத்தி களத்தை பலப்படுத்தியிருப்பதும் அரசாங்கத்திற்கு தலையிடியை தோற்றுவித்துள்ளது அதனால் மேல் மாகாண சபைத் தேர்தலை தனியாக நடத்தி அரசியல் கலநிலையை பரீட்சித்துப் பார்ப்பது ஜனாதிபதியின் நோக்கமாக இருக்கிறது. எவ்வாறாயினும் இவ்வாறு தேர்தல் வரைபடத்தை மாற்றுவதன் மூலம் தெரிய வருவதாவது அரசாங்கத்தின் நெருக்கடியும் ராஜபக்ஷாக்களுக்கு உறுதியான நிலைபாட்டில் தளம்பல் நிலை தோன்றி உக்கிரமடையும் நிலை மேலோங்குகிறதென காட்டுகிறதென அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோட்டத் தொழிலாளர்களின் எதிர்பார்ப்புகளை சிதறடித்த வரவு செலவுத் திட்டம்

–தோழர் இராமலிங்கம் சந்திர சேகர்




நிதியமைச்சர் மகிந்த ராஜபக்ஷ அவர்கள் 2005ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து தோட்டத் தொழிலாளர்களின் எதிர்பார்ப்பினை அதிகரிக்கின்ற பல உறுதிமொழிகளை முன்வைத்திருந்தார். மானிய விலையில் அரிசி 10 கிலோ, மண்ணெண்ணெய் மானியம், குழந்தை பால் மா மானியம், 10 பேர்ச்சர்ஸ் காணி, விஷேட ஆணைக்குழு, போன்ற வாக்குறுதிகளையும், அதேபோன்று 2009 ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் தோட்டங்களில் உள்ள மருந்துச் சாலைகளை வைத்தியச் சாலைகளாகவும், அவ்வைத்தியச் சாலைகளுக்கு போதுமான மருந்து, போதுமான ஊழியர்கள், சகல வசதிகளையும் பூர்த்திசெய்வதாக உறுதியளித்திருந்தார். ஆனால் இன்று எட்டு வருடங்கள் ஆன ,போதிலும் அவைகளின் ஒன்றையேனும் நிறைவேற்றப்படவில்லை. அவ்வாறு இருக்குபோது அரசாங்கத்தால் புறக்கணிக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கையோடு தொடர்புடைய அவர்களின் வாழ்வோடு பிண்ணிப் பிணைந்துள்ள அத்தியாவசிய காரணங்களை அடிப்படையாக கொண்டு பல்வேறு சந்தர்ப்பங்களில் தோட்டத் தொழிலாளர்கள் போராடி வந்துள்ளனர். அதன் அண்மையிலான கோரிக்கையான 21 கோரிக்கைகள் இயக்கத்தின் மூலம் ரூபாய் 5000 வரவு செலவில் கொடுப்பனவாகவும் 10 பேர்ச்சர்ஸ் காணியும், சகல தோட்டத் தொழிலாளர்களுக்கும் வீட்டினை அமைத்துக் கொள்வதற்காக நிவரணத்த பெற்றுக் கொடுக்குபடியான கோரிக்கையாகும்.

தோட்டப் புறங்களில் வாழும் பிள்ளைகளின் போஷாக்கின்மை சுமார் 25 வீதமாக அதிகரித்திருப்பதாக மத்திய வங்கி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறானபோதிலும் அவைகளை தணிப்பதற்காக 2014ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் எதுவிதமான மானியங்களும் தோட்டத் தொழிலாளர்களுக்காக அறிவிக்கப்படவில்லை. தோட்டத் தொழிலாளர்களின் சுகாதார பிரச்சினைகளை தீர்த்தல், தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளின் போஷாக்கின்மையை குறைத்தல் போன்ற திட்டங்களுக்கு இவ் வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்படவில்லை. அதேவேளை தோட்டத் தொழிலாளர்களுக்கு மானியத்தை வழங்காத அரசாங்கம் பெருந்தோட்டக் கம்னிகளுக்கு கடன் மானியத்தை வழங்கபோவதாக அறிவித்திருக்கிறது.

480 ரூபாய் நாட் கூலியை பெறுகின்ற தோட்டத் தொழிலாளர்களுக்கு 21 கோரிக்கை இயக்கத்தினால் கோரப்படும் ரூபாய் 5000 வரவு செலவுத் திட்டத்திலான மானியத்தையும், 10 பர்ச் காணி உள்ளிட்ட கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக தோட்ட மக்கள் தேயிலைத் தோட்டங்களிலிருந்து வெளியேறும் நிலையே தோன்றியுள்ளது. அதேபோன்று இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதுவதமான நிவாரணத்தையும் வழங்காத வரவு செலவுத் திட்டமாக வரலாறு படைத்துள்ளது.


## சிகப்பு நெப்போலியனுக்கு ஜே.வி.பி அஞ்சலி



சிகப்பு நெப்போலியன் என அழைக்கப்பயுடும் வியட்நாம் விடுதலை போராட்டத்தில் மகா புருஷரான ஜெனரல் நுயென் கியாப் கடந்த ஒக்டோபர் 05ஆம் திகதி காலமானார். ஆக்கிரமிப்பாளர் பிரான்ஸ் மற்றும் அமெரிக்க இராணுவத்தை வியட்நாமிலிருந்து விரட்டிப்பதற்காக தோழர் ஹோச் மின் தலைமையிலான செம்படைகளை வழிநடத்தியவர் ஜெனரல் கியாபாகும். இவரது இறுதி கிரியைகள் வியட்நாமில் நடைபெறும்போது, அரசின் அனைத்து நடவடிக்கைகளும் வைபவங்களும் இரத்துச் செய்யப்பட்டது. அதற்கு சமாந்திரமாக உலகிலுள்ள வியட்நாம் தூதரங்களிலும் ஜெனரல் கியாபிற்கு அஞ்சலி செலுத்தியது. இதற்கமைய இங்கு அமைந்துள்ள வியட்நாம் தூதரகத்திற்கு கடந்த நவம்பர் 12 ஆம் திகதி சென்ற மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் தோழல் சோமவன்ச அமரசிங்காவும், மத்திய குழு உறுப்பினர் தோழர் நலிந்த ஜயதிஸ்ஸ அவர்களும் ஜெனரல் கியாப் மரணம் தொடர்பான மக்கள் விடுதலை முன்னணியின் அனுதாப செய்தியினை தெரிவித்தனர். அவ்வேளையில் வியட்நாம் தூதுவர் தோழர் டெங் சிங் நாத் அவர்களுடன் விஷேட கலந்துரையாடல் ஒன்றையும் ஜேவிபி தோழர்கள் நடத்தினர்.

# ஆடைகள் இல்லா அரசாங்கத்தின் திருமணம்

ஜே.வீ.பீ பிரச்சாரச் செயலாளர் தோழர் விஜித ஹேரத்



பாரிய ஆரவாரங்களுடன் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டு களியாட்டங்கள் முடிவடைந்திருந்தபோதிலும் பற்றுச் சீட்டில் எஞ்சியிருப்பது மகிந்த ராஜபக்ஷ பொதுநலவாய மாநாட்டின் இன்னும் இரண்டு வருடத்திற்கு தலைவர் கதிரையில் அமர்தல், கோடிக்கணக்கான ரூபாய் பண விரயம், மனித உரிமைகள் இல்லாத நாடாக சர்வதேசத்தின் முன்னால் தலைக்குனியச் செய்தல், கெசினோ மன்னன் ஜேம்ஸ் பெக்கர் இலங்கை மெக்கவோ தீவுகளைப் போன்று கெசினோ உல்லாசபுரியாக மாறும் என்று கூறுவது மற்றும் பொதுநலவாய நாடுகளுடன் தொடப்பில்லாத சீன வர்த்தகர்கள் சிலருடன் கைசாத்திட்டது மட்டுமே என்று விஜித ஹேரத் தெரிவித்தார். அரசாங்கம் கடனுக்கு நடத்திய திருமண வீட்டுக்கு வந்தோர் கடைசியாக அரசாங்கத்தின் உடைகளை களைந்து நிர்வாணமகாக்கியுள்ளனர்.

அவர் இது பற்றி கடந்த 15,17ம் திகதிகளில் இரண்டு நாட்களாக அரசாங்கத்தால் நடத்திய பொதுநலவாய களியாட்டம் பற்றி கருத்து தெரிவிப்பதற்காக கடந்த 20ம் திகதி ஜே.வி.பி தலைமையகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இதனைத் தெரிவித்தார்.

"மக்கள் விடுதலை முன்னணி முன்வைத்த வேளைத்திட்டத்திற்கு ஏற்ப யுத்தம் முடிந்த பின்னர் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் பிரச்சினைகளை தேடுவதற்கு உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவை அமைத்திருந்தால், அதன்படி செயற்பட்டிருந்தால் கெமரன்களுக்கு இவ்வாறான கூற்றை தெரிவித்திருக்க வாய்ப்பிருக்காது. கெமரன் தனது அதிகாரம் முழுதையும் பயன்படுத்தி மாநாட்டில் அறிக்கை வெளியிட்டார். அரசாங்கம் அவருக்கு இடமளித்ததும், கெமரன் அவ்வாறான அறிக்கையை வெளியிட்டதும் இரண்டும் தவறாகும். என விஜித ஹேரத் குறிப்பிட்டார்.

## பதில் கிடைக்காவிட்டால் விவசாயிகள் போராட்டத்தில் குதிப்பர்



அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனம் தமது அமைப்பு இப்போது பிரம்மாண்டமான விவசாயிகளின் முன்னணியை அமைத்திருப்பதாகவும் விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு செவிமடுக்காவிட்டால் விவசாயிகளை போராட அழைக்கப்போவதாகவும் அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் தோழர் நாமல் கருணாரத்ன கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

"இந்த அரசாங்கம் விவசாயிகளின் வாக்குகளாலேயே ஆட்சிபிடமேறியது. ஜனாதிபதி குரக்கன் சால்வையை போட்டுக் கொண்டு, வரம்புகளில் நடந்து செல்வதை ரூபவாஹினியில் காட்டப்படுகிறது. அப்படிக் கூறும் ஜனாதிபதி விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுத்ததென்ன? அவரை ஆட்சிபீடமேற்றுவதற்காக விவசாய தாய்மார்கள் எவ்வளவு ஆதங்கங்கத்துடன் வாக்களித்தார்கள். விவசாயப் பெண்களுக்கு அரசாங்கம் தண்ணி காட்டியுள்ளது. எமது போராட்டத்தின் பயனாகவே அரசாங்கம் போலியகவேனும் வரவு செலவுத் திட்டத்திற்கு ஒரு சில ஆலோசனைகளை முன்வைத்திருக்கிறது. நாம் இந்த போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வோம். அரசாங்கத்திற்கு அச்சுறுத்தல் விடுக்கின்றோம். எதிர்வரும் 30ம் திகதிவரையில் காலக்கெடு கொடுக்கின்றோம். இன்னமும் இந்த வரவு செலவுக்கு திருத்தங்களை கொண்டு வரலாம். விவசாயிகளின் தனித்துவத்துடன் கோவணம் அணிந்த விவசாயிகளை கொழும்பிற்கு அழைத்து மக்களைத் தெளிவுபடுத்தும் எதிர்ப்பு நடவடிக்கைளை முனனெடுப்போம். அதனால் நாம் அரசாங்கத்திடம் இந்த மக்களை வீதிக்கு இறக்க வேண்டாமென நாம் கேட்டுக் கொள்கின்றோம்." என அவர் தெரிவித்தார்.

## கல்வி வலயத்திற்கு எதிராக



ராஜபக்ஷ அரசாங்கம் நாட்டின் ஒவ்வொரு அங்குல நிலத்தையும் பல்வேறுவிதமான வலயங்காக மாற்றி தமது மடியை நிரப்பிக் கொண்டிருக்கிறது. கிழக்கு மாகாணத்தில் கொழும்பு மாவட்ட நிலபரப்பைப் போன்று சதுர கிலோ மீட்டர் காணியை இந்தியாவுக்கு வலயம் அமைப்பதற்காக தாரைவார்த்துள்ளது. நாட்டின் தலைநகரத்தில் கெசினோ வலயத்தை அமைப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் பூர்த்திசெய்துள்ளது. களுத்துறை கெலிடே கடற்கரை பிரதேசத்தை நிர்வாணமாக நடமாடும் வலயமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளது. அதேபோன்று முதலீட்டு வலயத்தில் தொழிற்சாலைகளை அமைப்பதுபோன்று பல்கலைக்கழகங்களையும் அமைப்பதற்கான ஏற்பாடுகயையும் பூர்த்திசெய்துள்ளது.

ஆனால் இது தொடர்பில் நாட்டு மக்களும் இலவச கல்வியை பாதுகாப்பதாக போராடுவதாக கூறப்படும் குழுக்களும் மௌனித்திருக்கும் போது ஜே.வி.பி. யின் மாணவர் சங்கமான சோஷலிச மாணவர் சங்கம் அதற்கெதிராக போர் தொடுத்துள்ளது.

இங்கிலாந்தின் லேன்கெசெயர் பல்கலைக்கழகத்தின் மூலமாக இந்நாட்டில் அமைக்கப்படவுள்ள தனியார் பல்கலைக்கழகத்திற்கு எதிராக சோஷலிச மாணவர் சங்கம் கடந்த ஒக்: 29ஆம் திகதி பரித்தானிய தூதரகத்திற்கு சென்று மாணவர் அமைப்பின் தேசிய அமைப்பாளர் தோழர் நலிந்த ஜயதிஸ்ச தூதுவரிடம் மகஜர் ஒன்றை கையளித்தார். அதன்போது கருத்து தெரிவித்த தோழர் நலிந்த, பொதுநலவாய மாநாட்டிற்கு இங்கு வருகைத்தரும் இளவரசர் சார்ல்ஸ் மூலமாக இங்கு அமைக்கப்படவுள்ள பல்கலைக்கழகத்திற்கு அடிக்கல் நடுவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைக்கு எதிராகவே இந்த மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செஞ்சக்தி
மக்கள் விடுதலை முன்னணியின் உத்தியோகபூர்வ செய்தித்தாள்
198/19 பஞ்சிகாவத்தை வீதி ,கொழும்பு -10 011-2345594
E-mail sensackthynews@gmail.com

## ராஜபக்ஷமயமாகும் சட்டமும் வழக்கில்லாத தண்டனையும்

அண்மையில் கம்புறுபிட்டிய பிரதேசத்தில் பொலிஸ் கான்ஸ்டபல் ஒருவரும் அவரது மனைவியும் இனந்தெரியாதோரால் கொல்லப்பட்டனர். அதன் பின்னர் அது தொடர்பாக மூவர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு அந்த மூன்று பேரும் இப்போது இறந்துள்ளனர். அதில் ஒருவர் "பொலிசாரோடு ஏற்பட்ட மோதலில் பொலிஸ் துப்பாக்கி சூட்டுக்கு இரையாகி" மரணித்துள்ளார் மற்றைய இருவரும் "மறைத்து வைத்த ஆயுதங்களை காட்டச் சென்றபோது கைவிலங்குடன் ஆற்றில் மூழ்கி" இறந்துள்ளனர். பொலிஸ் காவலில் இருக்கும் போது "ஆயுதங்களை காட்டச்சென்று" இறந்தவர்களில் முதலாவது நபர்கள் இவர்கள் அல்ல. இதற்கு முன்னரும் பல சந்தர்ப்பங்களில் பொலிஸ் பாதுகாப்பிலிருந்தோர் இவ்வாறு இறந்துள்ளனர். இது இப்போது ஒரு கலையாக மாறியுள்ளது. மௌனமாக இருப்பதாலுக்கும் இதன் உண்மை நிலை என்னவென்று தெரியும். அந்த குற்றவாளிகளுக்கு ஆதரவாக இருந்தால் குற்றத்திற்கு ஆளாவோமென்ற அச்சத்தினாலும் "குற்றவாளிகளுக்கு இது போதாது" என்ற தொனிப்பட கூறியிருப்பதை காணமுடிகிறது. ஆனால் சமூகம் இப்போது மௌனத்தை களைத்தெறிந்து இதற்கு எதிராக குரல்கொடுக்க வேண்டிய காலம் உதயமாகியுள்ளது. அது குற்றவாளிகளை பாதுகாப்பதற்காக அல்ல "குற்றத்தை தடுக்கின்றோம்" எனும் போர்வையில் இடம்பெறும் "குற்றத்தையும் எதிர்காலத்தில் ஏற்படப்போகும் அச்சுறுத்தலை தடுப்பதற்காகும்.

இப்போது இலங்கையில் குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளது. இந்தக் குற்றங்களுக்கு பின்னால் பணம், சொத்து பிரச்சினை மற்றும் கறுப்பு பணத்தை தேடும் வியாபாரத்தில் ஏற்படும் பிரச்சினைகளேயாகும் இலங்கையின் முதலாளித்துவ அமைப்பும் திறந்த பொருளாதாரமும் நாட்டிற்கு உரித்தாக்கி இருப்பது இவைகளேயாகும். தாயின் வயிற்றில் வளரும் குழந்தையையும் குற்றவாளியாக ஆக்கியிருப்பது இந்த சமூக முறையாகும். அதை மாற்றுவதை விடுத்து தனி தனித் குற்றவாளிகள் எவ்வளவு பேரை கொன்றாலும் பிரச்சினைக்கு தீர்வு கிட்டபோவதில்லை.

இதன் கருத்து குற்றவாளிகளை தண்டிக்க கூடாது என்பதல்ல. முதலாளித்துவத்தை மாற்றும் வரையில், உண்மையாக குற்றச்செயல்களை தடுக்கும் சமூகம் உருவாகும்வரையில் இந்த சமூகத்தில் குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கியாக வேண்டும். ஆனால் அதை செய்யவேண்டியது இப்போது பொலிஸார் பின்பற்றிவரும் "பைஸ்கோப்" வடிவிலான, முறையில் அல்ல, ஏற்றக்கொள்ளப்பட்ட சட்ட விதிகளின்படியாகும். நியாயம் நீதி தொடர்பான கேள்விகள் உள்ள போதிலும் முதலாளித்துவத்தினுல் சட்ட வரையரைகள் உண்டு. குற்றவாளிகளை கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்துவதே பொலிசாரின் கடைமையாகும். அப்படியின்றி உலகில் பழைய சட்டமுறையான ஹமுராபியின் சட்டத்திகேற்ப "கண்ணுக்கு கண் பலி வாங்கும்" கொள்கையிலிருந்தல்ல. அவ்வாறு நடந்தால் தாம் நினைக்கும் எவரையும் கொல்லுவதற்காக பொலிசாருக்கு வழங்கப்படும் 'லைசனாக' அமையும். அது மக்களின் அது பாதுகாப்பிற்கு பாரிய அச்சுறத்தலாக அமைவதுடன் ஜனநாயகத்திற்கும் மனித உரிமைக்கும் மரண அடியாக அமைவது தவிர்க்கமுடியாது.

இது மேலும் அச்சறுத்தலாக இருப்பது அது மகிந்த ராஜபக்ஷாக்களின் ஆளும் கலையாக மாறிக்கொண்டிருப்பதினாலாகும். குற்றவாளி ராஜபக்ஷாவுக்கு ஆதரவானவர் என்றால் அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட மாட்டாது. அல்லது தாக்கல் செய்யப்பட்ட வழக்கு இடையில் சட்டமா அதிபரால் வாபஸ்பெறப்பட்டு குற்றவாளியை வீட்டிற்கு அனுப்புவதாகும். அப்படியும் முடியாது போனால் தண்டனை வழங்கப்பட்ட பின்னர் ஜனாதிபதியின் மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படுதலாகும். இது தொடர்பாக சான்றுகள் அண்மையில் போதுமான அளவு தேடிக்கொள்ள முடியும். அதேபோன்று குற்றத்துடன் தொடர்புடையோர் ராஜபக்ஷாவுக்கு சார்பானவர்கள் அல்லது பாதுகாப்பு படைகளுடன் தொடர்புடையவர் என்றால் சந்தேகநபர்கள் நீதிமன்றத்திற்கு கொண்டுச் செல்வதற்கு முன்னர் தடுத்துவைத்திருக்கின்ற போதே "இறந்துபோகின்றனர்" அது சமுகத்தாலும் சட்டத்துரையாலும் கேள்விடகுட்படுத்தாது மௌனமாக அங்கிகரிக்கப்பட்டு வருகிறது. ஆதனால் இது பாரிய பாதகமான நிலையாக புரிந்துக் கொண்டாக வேண்டும்.
ஏற்றுக்கொள்ளப்பட்ட நீதமன்றமென்றில் வழக்கு

7ம் பக்கம் பார்க்க..

## ராஜபக்ஷவின் வரவு செலவு வெற்று – செயலிழந்த சத்ததம

ம.வி.மு அரசியல் குழு உறுப்பினர்

– தோழர் அநுர திசாநாயக்க



இதுநாள்வரையில் வரவு செலவு அறிக்கையானது நாட்டின் பொருளாதாரத்தில் அடுத்த ஆண்டிற்கான பொருளாதார செயற்பாடு, பிரேரணைகள் மற்றும் முடிவுகள் பற்றிய ஆவணமாக இருந்தபோதிலும் ராஜபக்ஷ ஆட்சியில் வரவுசெலவுக்கு வெளியே பொருளாதார திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளை முன்னெடுக்கப்படுவதால் வரவு செலவு வெற்று அறிக்கையாக மாறியிருப்பதாகவும் அது நிதியமைச்சர் ஜனாதிபதியின் வெற்றுப் பேச்சாக மாறியிருப்பதாக ஜே.வி.பி.யின் அரசியல் குழு உறுப்பினர் தோழர் அனுர திசாநாயக்க தெரிவித்தார்.

அவர் 2014 வரவுசெலவுத் திட்டம் பற்றி மக்கள் விடுதலை முன்னணியின் நிலைபாட்டை தெரிவிப்பதற்காக கடந்த 22ம் திகதி ஜே.வி.பி தலைமையகத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே இதைத் தெரிவித்தார்.

எந்தவொரு ஆட்சிக்கும் 09 ஆண்டுகள் என்பது அந்த ஆட்சியின் நல்லது கெட்டதை அளவிடுவதற்கு மேலதிகமான காலமென சுட்டிகாட்டிய அனுர திசாநாயக்க, ராஜபக்ஷ ஆட்சியானது தமது 9வது வரவு செலவின் மூலமாக வெளிப்படுத்தியிருப்பது தமக்கு நீண்ட காலத்திற்கான பொருளாதார திட்டமோ குறுகிய காலத்திற்கான மக்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான இயலாமையை வெளிபடுத்தியுள்ளதாக தெரிவித்தார்.

"வரவு செலவுத் திட்ட ஆவணத்தில் உள்ளடங்கியிருக்கும் முன்மொழிவுகள் செயற்படுத்தப்படுமென்ற நம்பிக்கை நிலவியது. வரவு செலவுத் திட்டத்தில் கூறுவதெல்லாம் சரியென்று அவர்கள் நம்பினர். ஆனால் தற்போது நடந்துக் கொண்டிருப்பதென்ன? சகல பாடசாலை பிள்ளைகளுக்கும் சப்பாத்து ஜோடி தருவதாக கடந்த வருட வரவு செலவில் சொல்லப்பட்டது. அப்போது அமைச்சர்கள் மேசையைத் தட்டி ஆதரித்தனர். சப்பாத்துக்களை கையளிக்கும் நிகழ்வில் பெற்றோர்கள் மத்தியில் உரையாற்றலாமென அவர்கள் கனவு கண்டிருப்பர். ஆனால் எதுவம் கொடுக்கவில்லை. அதனால் வரவுசெலவு அறிக்கையென்பது இப்போது பொறுமதிவாய்ந்ததோர் ஆவணமல்ல. அது வெறும் தேர்தல் அறிக்கையைப் போன்று ஏமாற்று ஆவணமாகும்.

இந்த வரவு செலவில் ஜனாதிபதி கூறிய இரண்டு விடயங்கள் உள்ளன. விவசாயிகளுக்கான ஓய்வூதியம் அரச ஊழியர்களுக்கு கொடுப்பனவு அதிகரிப்பாகும். இது முற்றிலும் மக்களை ஏமாற்றிய கண்கட்டி வித்தையாகும், விவசாய ஓய்வூதியத்திற்கு பங்களிப்புச் செய்த விவசாயிகள் ஒன்பது இலட்சத்து ஐம்பத்திரண்டாயிரம் பேரில் தொன்னூற்று இரண்டாயிரம் பேர் ஓய்வூதியத்தை பெற்று வந்தனர். ஆனால் இற்றைக்கு இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஜனாதிபதியின் தலைமையிலான நிதியமைச்சின் கீழ் உள்ள விவசாய காப்புறுதி சபை இதை இடைநிறுத்தியது. அப்போது ஓய்வூதியம் 60 வயது பூத்தியடைந்தவர்களுக்கு வழங்கப்பட்டது. இடைநிறுத்தப்பட்ட இரண்டு வருடத்தில் மேலும் 55 ஆயிரம் விவசாயிகள் ஓய்வூதிய பெறுனர்களாக தகைமை பெற்றுள்ளனர். அரசாங்கம் அடுத்த வருடத்திலிருந்து விவசாய ஓய்வூதியத்திற்காக 1000 மில்லியன் ரூபாய் ஒதுக்குவதாக கூறுகிறது. ஆனால் விவசாயிகளின் கடந்த இரண்டு வருட ஓய்வூதிய நிலுவையாக 2150 மில்லியன் ரூபாய் உள்ளது. இதிலிருந்து தெரியவருவதாவது நிலுவை தொகையை கொடுக்க மாட்டோம் என்பதையே கோடிட்டு காட்டுகிறது. விவசாயிகளுக்கு புதிதாக ஒன்றையும் கொடுக்கவில்லை. வியசாயிகளின் பங்களிப்புத் தொகையை மேலும் அதிகரிப்பதற்கான யோசனை முன்மொழியப்பட்டிருக்கிறது. இது முற்று முழுதாக விவசாயிகளை ஏமாற்றிய கபட நாடகமாகும்.

அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படவில்லை. 2006ஆம் ஆண்டு முதல் அரச ஊழியர்களின் அடிப்படை சம்பளம் அதிகரிக்கப்படவில்லை. கடந்த 07 வருடங்களாக வாழ்க்கை செலவு கொடுப்பனவுக்கு சிறு தொகையை அதிகரித்தமை மட்டுமேயாகும். அரச ஊழியர்களின் கோரிக்கை கொடுப்பனவுகளை அடிப்படை சம்பளத்துடன் சேர்க்கும்படியும், சம்பளத்தை 10000 ரூபாவால் அதிகரிக்கும் படியாகும். ஆனால் அரசாங்கம் அரச ஊழியர்களை ஏமாற்றியது. 1200 ரூபாய் என்பது நாளொன்றுக்கு 40 ரூபாய் ஆகும். அரச ஊழியர்களை மட்டுமல்ல தமது வாழ்நாள் முழவதும் அரச சேவைக்காக தம்மை அற்பணித்த ஓய்வூதிய பெறுனர்களையும் ஏமாற்றியுள்ளது. 2006க்கு முன்னர் ஓய்வூபெற்றவர்களுக்கு அரசாங்கம் நாளொன்றுக்கு ஒதுக்கியிருக்கும் தொகை வெறும் 16 ரூபாய். 2006க்கு பின்னர் ஓய்வுபெற்றவர்களுக்கு நாளொன்றுக்கு வெறும் 11 ரூபாய். அரசாங்கம் பொதுநலவாய காற்றாடியை சுழற்றி இனிப்பை கொடுத்துள்ளது.

தொலைதொடர்பு வரி 5% அதிகரித்து 4000 மில்லியன் ரூபாவை ஈட்டுவதற்கு எதிர்பார்க்கிறது. அதன் கருத்து என்னவென்றால் தொலைபேசியையும் இணையத்தள வசதிகளையும் கொண்டுள்ள அனைவருக்கும் 5% கட்டணம் அதிகரிக்கப்படுமென்பதாகும். எமது நாட்டில் 5 மில்லியன் குடும்பங்கள் இருக்கிறது. இந்த கட்டண அதிகரிப்பிற்காக ஒவ்வொரு குடுப்மமும் 400 ரூபாய் செலுத்தியாக வேண்டும். அதேபோன்று அரச ஊழியர் உள்ளிட்ட பெரும்பாலானோா சுப்பர் மார்கட்டுகளில் பொருட்களை கொள்வனவு செய்கின்றனர். சுப்பர் மார்கட்டுகளுக்கு விதிக்கப்படும் புதிய வரியின் மூலமாக அரசாங்கம் ரூபாய் மில்லின் 1500 ஈட்டுவதற்கு எதிர்பார்க்கிறது. அத்தொகை பின்னர் நுகர்வோர் மீதே சுமத்தப்படும். அரசாங்கம் வரவு செலவில் கூறாத விடயம் புதிய சுங்க வரி அதிகரிப்பின் மூலமாக 12.750 மில்லியன் ரூபாய் தேடப்போவதாக கூறுகிறது. இதன் மூலம் இறக்குமதிச் செய்யப்படும் அனைத்து பொருட்களும் விலை அதிகரிக்கப்படும். சம்பள அதிகரிப்பிற்காக 17,200 மில்லியனும், ஓய்வூதிய கொடுப்பனவுக்கு 1000 மில்லியனும், மொதத்தமாக 18. 200 மில்லியன் ஒதுக்கபடவுள்ளது. ஆனால் மேற்கூறிய வரியின் மூலமாக மட்டும் அரசாங்கம் 31.750 மில்லியன் ரூபாய் ஈட்டுகிறது. இப்போது மிகுதி பணத்திற்கு என்ன நடக்கிறதென மக்கள் கேட்டாக வேண்டும். அதாவது 15000 மில்லியன் சூரையாடப்படுகிறது. அதனால் அரசாங்கம் மக்கள் மீது பாரிய வரி சுமைகளை ஏற்றியுள்ளது.

இவ்வாறு வரி அறவிட்டு, அபராதம் விதித்து பெற்றுக்கொள்வதற்கு உதிதேசித்துள்ள மொத்த வருமானம் 1495 பில்லியன்களாகும். இதுநாள்வரையில் எப்போதும் எதிர்பார்த்த வருமானம் கிடைத்தாக இல்லை. அதில் 90% மட்டுமே கிடைததிருக்கிறது. அதற்கிணங்க 2014ன் உண்மையான வருமானம் 1345 பில்லியன்களாகும். எவ்வாறாயினும் கடன் தவணைக்கு 589 பில்லியனும் வட்டிக்காக 445 பில்லியனும் அதாவது 1034 பில்லியனை செலுத்தியாக வேண்டும். ஏனைய செலவுகளுக்கு எஞ்சியிருப்பது 211 பில்லியனாகும். ஒரு வீட்டில் இவ்வாறு நடந்தால் அது வங்குரோத்தடைந்த வீடாக கருதப்படும். இப்போது ராஜபக்ஷ அரசாங்கமும் நாட்டை அவ்விடத்திற்கே கொண்டு வந்திருக்கிறது. இது அரச ஊழியர்களுக்கு சம்பளத்தை செலுத்துவதற்கு போதுமானதல்ல. அரசாங்கம் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் கடன் 1278 பில்லியன்களாகும். அதற்கிணங்க இந்த வரவு செலவுத் திட்டமென்பது கடன் வாங்குவதும் கடனை செலுத்துவதுமாகும் இதுவா ஆச்சரியம்.

2014ல் அனைத்து செலவுகளுக்கு கடன் பட்டாக வேண்டும். ஜனாதிபதியின் உணவு, தொலைபேசி கட்டணம், வெளிநாட்டு பயணம், எம் பி, அமைச்சர்மார்களின் உணவுகளுக்காகவும் கடன் பட்டாக வேண்டும். இப்போது மக்களை போன்றே ஜனாதிபதியும் கடனுக்கே சாப்பிட வேண்டியிருக்கிறது.

08 வருடங்களுக்கு பின்னர் ராஜபக்ஷ அரசாங்கம் பாரிய பொருளாதார வீழ்ச்சிக்கு ஆளாகியுள்ளது. இந்த வரவு செலவில் காட்டுவது அந்த பொருளாதார நெருக்கடியாகும். பொருளாதார கொள்கையின் தவறுகள் இதில் காட்டுகிறது. இது நாட்டின் சொத்துக்கள் அனைத்தும் சிறுபகுதியினரிடம் கேந்திரமடையும் பொருளாதாரமாகும். பிரதி நிதியமைச்சர் பாராளுமன்றத்தில் ஏற்றக்கொள்ளப்பட்டவாறு 20 சதவீத குடுமபங்ககள் தேசிய வருமானத்தில் 54 வீதத்தை அனுபவிக்கின்றனர். அரசாங்கத்தின் நன்மைகள் அனைத்தும் டீல்காரர்களுக்கும், கொந்திராத்துகாரர்களுக்கும், பங்கு சந்தை சூதாட்டக்காரர்களிடமே, சென்றடைகிறது. சிறு குழுவினரிடம் பொருளாதாரத்தின் மொத்த சாரும் குவிந்த வண்ணமுள்ளது.

தொழிற்சங்கங்களால் 21 கோரிக்கைகளை பெற்றுத் தரும்படி அரசாங்கத்திடம் கோரியிருந்தனர். மீனவர்

07ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர் யுவதிகளை ராஜபக்ஷ மயமாக்கலிலிருந்து விடுவிக்க வேண்டும்



SYU – சோஷலிச இளைஞர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் – **பிமல் ரத்நாயக்க**

நமது நாட்டு இளைஞர் யுவதிகளை ராஜபக்ஷமயமாக்கலிலிருந்து விடுவிக்க வேண்டும். சோஷலிச இளைஞர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர்.மக்கள் விடுதலை முன்னணியின் மத்திய குழு உறுப்பினர் தோழர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார். (அவர் இதுபற்றி (ஒக் 08) "சே" தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட ஊடக வியலாளர் மாநாட்டிலேயே இக்கருத்தை வெளியிட்டார் "பயணம்" எனும் தொனிபொருளில் நடைபெறவுள்ள கொழும்பிலிருந்து வவுனியா வரையிலான மோட்டார் சைக்கில் சவாரி எனும் நிகழ்ச்சி ஏற்பாடுகளை அறிவிப்பதற்காகவே ஊடகவியலாளர் சந்திப்பு இடம்பெற்றது.

பத்தரமுல்லை பெலவத்தையில் அமைந்துள்ள மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) தலைமையகத்தில் (07) இந்தசந்திப்பு இடம்பெற்றது. இதில் அவர் தெரிவித்த கருத்துக்கள் பின்வருமாறு.

சோஷலிச இளைஞர் சங்கத்தினால் ஒக்டோபார் 08ம்திகதி சே தினத்தை முன்னிட்டு சுதந்திரத்திற்கான இளைஞர்களின் பயணம் எனும் செயற்திட்டமென்று நாம் ஏற்பாடுச் செய்துள்ளோம். இதன் நோக்கமாக

> உதாரணமாக குருணாகல் மாவட்டத்தில் யுத்தம்முடிந்த பின்னர் 100 பேருக்குதொழில் வழங்கக் கூடிய தொழிற்சாலையொன்றை கூட ஆரம்பிக்கவில்லை. முழு நாட்டிலும் நிலமை இதுவா-கும்கெசினோ சூ தாட்ட நிலையங்கள் அமைத்தபோதிலும் இளைஞர் யுவதிகளுக்கு தொழில்வழங்குவதற்காக தொழிற்சலை ஒன்றேனும் அமைக்கப்படவில்லை. அதனால் நமது நாட்டு இளைஞர்யுவதிகள் தொழிலின்மையிலிருந்து சுதந்திரமடைந்தாக வேண்டும். நாட்டில் சிறைக்கைதிகளில் 65 வீதமானர் இளைஞர் யுவதிகளாகும். அதற்கானகாரணம் அவர்களுக்கு கல்வி, சரியான தொழிலின்மையாகும். விளையாட்டுத் துறையிலும்சுதந்திரமில்லை. விளையாட்டு முழுமையாக ராஜபக்ஷ மயமாக்கப்பட்டுள்ளது

நாம் எதிர்ப்பார்ப்பது சேகுவேரா எனும் அரசியல்வாதி, தலைவன், இராஜதந்திரி, வைத்தியர்,மனித நேயவாதியை பற்றி நாட்டின் இளைஞர் யுவதிகளை தெளிவுபடுத்துவதற்காக பல நிகழ்ச்சிகள் ஏற்பாடுச் செய்யபப்ட்டிருக்கிறது.

சேகுவேரா 1955ஆம்ஆண்டு முதல் 1965ஆம் ஆண்டு வரை கியூப புரட்சிக்காகபெரும் பணியாற்றினார் அதேபோன்று புரட்சியின் பின்னர் கியூபஅரசாங்கத்தின் நிதியமைச்சராகவும் இராஜதந்திரியாகவும் செயற்பட்டார் அதன் பின்னர் 1965-67உலகில் பல நாடுகளில் சமூக நீதிக்காக எழுந்த போராட்டங்களில் அவர் கலந்துகொண்டார் பின்னர்1967ல் பொலிவியாவில் வைத்து அமெரிக்க சீ.ஐ.ஏ உளவுப்படையால் கொல்லப்பட்டார்.


ஆர்ஜென்டினாவில் பிறந்த தோழர் சேகுவேரா பதவி, பட்டம், பணத்தை பொருட்படுத்தாது அவற்றை துச்சமென மதித்து பல நாடுகளில் நீதி,நேர்மைக்காக போராடினார் பத்திரிகைகளில் தலைப்பு செய்திகளை போட்டுக் கொள்வது அவரது நோக்கமாக இருக்கவில்லை. தனக்கு எந்தவிதத்திலும் தொடர்பில்லாத கியூப நாட்டில் சார்வாதிகாரி பட்டிஸ்டாவின் ஆட்சியை வீழ்த்துவதற்கும் கியூபாவில் சமூக நீதியை நிலைநாட்டுவதற்காகவும் அற்பணிப்புடன் செயற்பட்டார் பின்னர் தமக்கு கிடைத்த பட்டம் பதவிகளைத் துறந்து பொலியாவுக்குச் சென்றார். அவர், துப்பாக்கியால், பேனாவால்,வார்த்தைகளால் தமது சொற்பொழிவுகளால் உலகத்திற்கு பெரும் அழுத்தத்தை கொடுத்தார். இன்று உலகம் முழுவதிலும் இளைஞர் யுவதிகள் சேகுவேராவால் கவரப்பட்டுள்ளனர். அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடும் நாம் மாத்திரமல்ல. முச்சக்கர வண்டிகளில். இளைஞர்கள் அணியும் டீ சேர்ட்டுகளில் சேகுவோராவின் படம் பொறிக்கப்பட்டிருப்பதை காணலாம். அண்மையில் பிரசித்திப் பெற்ற பல்தேசிய நிறுவனமொன்றின் சஞ்சிகையான "டைம்ஸ" ஆய்வொன்றை நடத்தியது. அதில் 20ஆம் நூற்றாண்டில் உலகத்திற்கு தாக்கத்தை ஏற்படுத்திய நூறு பேரில் சேகுவேராவின் பெயரும் உள்ளடக்கப்பட்டது. அந்தநூறுபேரில் உலகத்திற்கு செய்த அழுத்தங்கள் நாளுக்கு நாள் குறைவடையும்போது சேகுவேராவின் அழுத்தம் நாளுக்கு நாள் அதிகரித்திருக்கிறது. அவர் இளைஞர்களுக்கு,அரசியலுக்கு மென்மேலும் அழுத்தம் கொடுத்து வருகிறார். அதற்கானகாரணம் அதாவது குறுகிய 12 வருடங்களில் அவர் சமூக நேர்மைக்காக பாரிய அற்பணிப்புகளை புரிந்தமையாகும். அவர் பார்வைக்கு மிகவும் கவர்ச்சிகரமானவர் அதற்கப்பால் செயற்பாடுகளில், மனிதநேயத்தில் அவர் கவர்ச்சிகரமானவா, அதனால் சேகுவேராவின் நாமத்தை இளைஞர்கள் மத்தியில் கொண்டுச் செல்ல வேண்டும். தியாகம், நீதி,நேர்மைஎன்பது நமது நாட்டு இளைஞர் யுவதிகளுக்கு பொருந்தும். நமது நாட்டை பொறுத்தவரையில் சோஷலிச இளைஞர் சங்கமான நாம் 2008ஆம் ஆண்டு முதல் சேகுவேராவை விற்பதற்குப் பதிலாக சமூக அபிவிருத்தியின் நோக்கத்திற்காக பயன்படுத்தி வருகினறோம்.அவர் எழுதினார்,வாசித்தார், அதேபோன்று போராடினார், முழுவாழ்க்கையும் நீதி நேர்மைக்காக அற்பணித்தார். இன்று எமது நாட்டில் ராஜபக்ஷ அல்லாத ஊடகங்களுக்கு, ராஜபக்ஷ அல்லாத கலைஞர்களுக்கு,தொழிற்சங்க இயக்கத்திற்கு, கல்விமான்களுக்கு, புத்திஜீவிகளுக்கு தனித் தனி தலைவர்களுக்கு நாட்டில் இருக்க வேண்டிய குறைந்தபட்ச சுதந்திரமும் இல்லாது போயுள்ளது. அண்மையில் ஊடகவியலாளர் ஒருவர் மீதுகொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. அவர் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளார். ஒவ்வொரு மாதமும் இவ்வாறான பலசம்பவங்கள் நிகழ்கின்றன. ஊடகங்கள் மீதான அடக்குமுறைகள் அதிகரித்து காணப்படுகிறது. நாட்டின் அரசியல் தார்மீகத்தின், நீதிமன்றத்தின்,பாராளுமன்றத்தின் மீதான அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருகிறது. பணம், அதாவது இலஞ்சம் கொடுத்து எம்.பிகளை விலைக்கு வாங்கி பாராளுமன்றத்தில் மூன்றில்லிரண்டுஅதிகாரத்தைப் பெற்றுக்கொண்டு புதிய அரசியல் யாப்பும் எழுதப்பட்டுனள்ளது அதுசட்டத்திற்கு முரணானதைப் போன்றே அரசியல் தார்மீகத்திற்கும் முரணானது. நமது நாட்டு மக்கள் பாராளுமன்றத்திற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை அதிகாரத்தை பெற்றுக் கொடுக்கவில்லை ஆனால் சட்டவிரோதமாக அமைத்துக்கொண்ட 3-2பெரும்பான்மை அதிகாரத்தை சர்வாதிகாரத்திற்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது. பாராளுமன்றத்திற்குரிய சுயாதீன ஆணைக்குழுக்கள் ஒழிக்கப்பட்டது. நீதிமன்றத்திற்கு,மாணவர் இயக்கம் தொழிற்சங்க இயக்கம் போன்றன துன்புறுத்தி அவைகளை நசுக்கி சர்வாதிகாரத்திற்கு தேவையானவற்றை செய்துக் கொண்டிருக்கிறது நமது நாட்டு இளைஞர்களுக்கு சுதந்திரம் இல்லை. கல்வி கற்பதற்கான சுதந்திரம் பறிக்கப்பட்டுள்ளது. உயர்தரத்தில் சித்தியடையும்1.50000பேரில 20.000பேர் மட்டுமே பல்கலைக்கழகம் செல்கின்றனார் கல்வியின்சுதந்திரம் பணம் படைத்தவர்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டுள்ளது. தொழில் செய்வதற்காக சுதந்திரமில்லை. உதாரணமாக குருணாகல் மாவட்டத்தில் யுத்தம்முடிந்த பின்னர் 100 பேருக்குதொழில் வழங்கக் கூடிய தொழிற்சாலையொன்று கூட ஆரம்பிக்கவில்லை. முழு நாட்டிலும் நிலமை இதுவாகும்.கெசினோ சூதாட்ட நிலையங்கள் அமைத்தபோதிலும் இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வழங்குவதற்காக தொழிற்சலை ஒன்றேனும் அமைக்கப்படவில்லை. அதனால் நமது நாட்டு இளைஞர்யுவதிகள் தொழிலின்மையிலிருந்து

07ம் பக்கம்...

> **"நாட்டில் மேட்டுகுடியை சார்ந்த சாஸ்த்திரக்காரர் ஒருவர் சொன்ன பொய்யை மறைப்பதற்காக இப்போதுபெரு முயற்ச்சிகள் எருக்கப்படுகின்றன. கதிர்காம கடவுள் பற்றி கூறிய பொய்யின் காரணமாக கதிர்காம கடவுளை பார்ப்பதற்கு பெரும்திரளானர் திரண்டனர் நமது நாட்டு இளைஞர்கள் ஐ போன்களை பாவித்தபோதிலும் மூடநம்பிக்கையிலான மனோபாவங்களிலிருந்து மீளவில்லை.மூடநம்பிக்கையிலான கருத்துக்களை பரப்பும் ஊடகங்கள் அவர்களுக்கு விஞ்ஞான ரீதியான-அறிவை பெற்றுக் கொடுப்பற்கான நேரத்தை ஒதுக்குவதில்லை"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பொதுநலவாய' மாநாடும் சர்வதேச பொறியும்



அண்மையில் இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாய அரச தலைவர்களின் மாநாடானது இலங்கையை பாரிய கடன் பொறியிலும், சர்வதேச தலையிட்டு பொறியிலும் தள்ளிவிட்ட மாநாடாக முடிவடைந்துள்ளது. ராஜபக்ஷ ஜனாதிபதியின் தலைவர் பதவி கனவை நனவாக்குவதற்காக நடத்திய இந்த மாநாட்டின் செலவை நிரப்புவதற்காக அரசாங்கம் பாராளுமன்றத்தில் 108 கோடி ரூபாய் பணத்தை கேட்கிறது. பொருளாதார ரீதியான நன்மைகளை பெறுவதற்குப் பதிலாக, இது கடன்பட்டு நடத்திய கல்யாணமாகும். மறுபுறத்தில் நாட்டிற்கு சர்வதேச ரீதியில் கௌரவத்தையோ வெற்றியையோ கொணர்வதற்குப் பதிலாக நாட்டை சர்வதேச பொறியில் சிக்கவைப்பதற்கு பெரும் பங்காற்றியுள்ளது. அதுமட்டுமல்ல இலங்கையை அவமானத்திற்கு உள்ளாக்கியுள்ளது. 2009ஆம் ஆணடு யுத்தம் முடிவடைந்த தருணத்திலிருந்தே ஏகாதிபத்தியச் சக்திகள் தாங்களது நிகழ்ச்சி நிரலுக்குள் இலங்கையை கொண்டுவரும் நோக்கத்துடனேயே செயற்பட்டனர். அதற்காக அவர்கள் திட்டம் வகுத்துச் செயற்பட்டனர். இலங்கையின் உள்ளக பிரச்சினையில் தலையிடுவதற்காக அவர்கள் போர் குற்றம், மனித உரிமை மீறல், ஜனநாயகம் மற்றும் பொறுப்பு கூறல் போன்ற விடயங்களை என்ன நோக்கத்துடன் கொண்டுவந்திருந்தாலும் இவைகள் கட்டாயமாக ஒரு ஜனநாயக நாடு உண்மையிலேயே கடைபிடிக்க வேண்டிய பொறுப்புகளாகும். இதன்போது ராஜபக்ஷ அரசாங்கம் செய்தது என்ன? ஏகாதிபத்தியத்தின் நோக்கத்தை புரிந்துக் கொண்டு, மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகத்தை பாதுகாத்து பொறுப்புக் கூறி ஏகாதிபத்தியத்தின் சதியை தோற்கடித்தா? இல்லை! தமது பதவி பேராசையின் நிமித்தமாக அந்தப் பொறியில் நாட்டை சிக்கவைத்துள்ளது. உலகத்தை ஏமாற்றிய அரசாங்கம் முழு நாட்டையே படுகுழியில் தள்ளியுள்ளது. பொதுநலவாய மாநாட்டிற்கு வந்த பிரித்தானியா பிரதமர் இங்கு அவர் ஆற்றிய உரையே இதற்கான சான்றாகும். அவர் போர் குற்றம் தொடர்பாக உள்நாட்டு விசாரணை உருப்படியாக நடைபெறாவிட்டால் சர்வதேச விசாரணைக்கு முகம்கொடுத்தாக வேண்டுமென எச்சரித்துள்ளார். அதிலிருந்து தொடர்வதாவது பிரித்தானிய பிரதமர் இலங்கைக்கு வந்தது ராஜபக்ஷவின் முடிசூட்டு விழாவுக்கல்ல. அவரது நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப செயற்படுவதற்கேயாகும். ஆனால் ஜனாதிபதி மகிந்த தமது தலைவர் பதவியும் முடிசூடுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார். அதன்மூலம் நாட்டிற்கு ஏற்படப்போகும் ஆபத்தை அவர் உணர்ந்ததாக தெரியவில்லை. போர் குற்றம் மற்றும் மனித உரிமை மீறல்களைப் பற்றி சர்வதேச விசாரணை பற்றிய கருத்தானது ஒருவரது தனிபட்ட கருத்தல்ல. அது படிப்படியாக உறுதிப்படுத்தப்பட்ட குறிக்கோளுடன் மேடையேற்றப்பட்ட நாடகமாகும். அடுத்த வருட முற்பகுதியில் நடைபெறவிருக்கும் மனித உரிமைகள் ஆணையகத்தில் நிறைவேற்றப்படவுள்ள இந்த பிரேரணை பாதகமாக அமையப்போவது ராஜபக்ஷாவிற்கு அல்ல இலங்கைக்காகும். அடுத்த வருடம் இந்த பிரேரணை இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்படுமானால் அது ஏகாதிபத்தியவாதிகளின் திட்டமிட்ட நடவடிக்கையின் ஒரு அங்கமாகும் அதற்கு ராஜபக்ஷ அரசாங்கமே முழு பொறுப்பு.

யுத்தம் முடிந்ததன் பின்னர் மனித உரிமை பிரச்சினையை மையமாகக் கொண்டு சர்வதேச ரீதியாக நடைபெற்ற நிகழ்வுகளை வரிசைப்படுத்தினால் ஏகாதிபத்தியச் சக்திகள் செயற்பட்டிருக்கும் திட்டமிட்ட முறையையும் ராஜபக்ஷ அரசாங்கம் செயற்பட்டிருக்கும் முட்டாள் தனமான ஏமாற்று வடிவத்தையும் புரிந்துக் கொள்ள முடியும்.

யுத்தம் முடிந்தவுடன் 2009 மே நடுபகுதியில் நடைபெற்றுக் கொண்டிருந்த ஐ.நா மனித உரிமைகள் பேரவை கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கவிருந்த பிரேரணையை தடுப்பதற்காக இலங்கையின் நட்பு நாடுகளின் ஆலோசனையின் படி இலஙகையில் (13 நாடுகளின் கையொபப்த்துடன்) மே 22ம் திகதி முன்வைக்கப்பட்டது. அதன் மூலம் மனித உரிமைகளை பாதுகாப்பதாகவும் அது பற்றிய உள்ளக விசாரணை நடத்துவதாகவும் ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் இணைந்து செயற்படுவதாகவும் இலங்கை உறுதியளித்தது. இதேவேளை இந்நாட்களில் ஐ.நா செயலாளர் பான் கீ மூன் இலங்கைக்கு விஜயம் செய்து வடபகுதியையும் பார்வையிட்டார். விஜயத்தை முடித்துக் கொண்ட பான் கீ மூன் இலங்கையிலிருந்து வெளியேறுவதற்கு முன்னர் 2009 மே 23ம் திகதி இலங்கை அரசாங்கத்துடன் சேர்ந்து கூட்டறிக்கையில் கைசாத்திட்டார். அதில் "சர்வதேச மனித உரிமை நிலைமைகளுக்கேற்ப மனித உரிமைகளை பாதுகாப்பதற்கும் மற்றும் மனித உரிமை ஆணைக்குழுவுடன் இணைந்து ஒத்துழைப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் இவைகள் வெறும் தேர்தல் கால வாக்குறுதிகளைப் போன்று வார்த்தை ஜாலங்களுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டது. இவற்றையே ஏகாதிபத்தியவாதிகள் தமக்கு சாதகமாக பயன்படுத்தினர்.

இதற்கிடையே இலங்கை அரசாங்கம் உறுதியளித்தப்படி செயற்படவில்லையெனக் கூறி ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூன் இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பாக தமக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஆலோசனைக் குழுவொன்றை அமைப்பதற்கு தீர்மானிக்கிறார். இதன்போது மகிந்த ராஜபக்ஷ இதனை தவிர்ப்பதற்காக 2010 மே 15ஆம் திகதி கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் பற்றிய ஜனாதிபதி ஆணைக்குழுவை அமைத்தார். ஆனால் பான் கீ மூன் அவர்கள் தனது ஆலோசனைக் குழுவை தருஸ்மான் அவர்கள் தலைமையில் 2010 செப்டம்பர் மாதம் அமைத்தார். தருஸ்மான் அறிக்கை 2011 ஏபரல் 12ஆம் திகதி பான் கீ மூனிடம் கையளிக்கப்பட்டது. பின்னர் ஐ.நா சபை அதை ஏப்ரல் 26ம் திகதி வெளியிட்டது. அது இலங்கைக்கு பாதகமானதாக அமைந்தது. இதனடையே கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை 2011 நவம்பர் 20ஆம் திகதி ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது. இது ஜனாதிபாதியால் வெளியிடவில்லை. வெளிநாடுகளின் அழுத்தம் காரணமாகவும் வரவு செலவுக்காக வெளிநாடுகளில் கடன் வாங்க தேவைபட்டதாலும் இறுதியாக இந்த அறிக்கையை அமைச்சர் நிமால் சிரிபால் டி சில்வா 2011 டிச 16ஆம் திகதி பாராமன்றத்திற்கு சமர்ப்பித்தார். இந்த அறிக்கையில் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகம் தொடர்பாக சாதகமானதும் பிரிவினைவாதத்திற்கும் சாதகமானதும் நாட்டிற்கு பாதகமானதுமான கருத்துக்கள் உள்ளடங்கியிருந்தது. இதனுடன் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழவின் அறிக்கையை நடைமுறைபடுத்துபடி ஏகாதிபத்திய நாடுகள் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க ஆரம்பித்தனர். இந்த நடவடிக்கைகளின் மத்தியில் அரசாங்கம் உண்மையாகவே மனித உரிமைகளை பாதுகாத்து தமிழ் மக்கள் எதிர்கொண்டிருந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான எதுவிதமான

07ம் பக்கம்...

இலங்கைக்கு எதிராக முன்வைக்கவிருந்த பிரே–ரரணையை தடுப்பதற்காக இலங்கையின் நட்பு நாடுகளின் ஆலோசனையின் படி இலங்கையில் (13 நாடுகளின் கையொப்பத்துடன்) மே 22ம் திகதி முன்வைக்கப்பட்டது. அதன் மூலம் மனித உரிமை–களை பாதுகாப்பதாகவும் அது பற்றிய உள்ளக விசாரணை நடத்துவதாகவும் ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் இணைந்து செயற்படுவதாகவும் இலங்கை உறுதியளித்தது. இதேவேளை இந்நாட்களில் ஐ.நா செயலாளர் பான் கீ மூன் இலங்கைக்கு விஜயம் செய்து வடபகுதியையும் பார்வையிட்டார். விஜயத்தை முடித்துக் கொண்ட பான் கீ மூன் இலங்கையிலிருந்து வெளியேறுவதற்கு முன்னர் 2009 மே 23ம் திகதி இலங்கை அரசாங்கத்துடன் சேர்ந்து கூட்டறிக்கையில் கைசாத்திட்டார். அதில் ''சர்வதேச மனித உரிமை நிலைமைகளுக்கேற்ப மனித உரிமை–களை பாதுகாப்பதற்கும் மற்றும் மனித உரிமை ஆணைக்குழுவுடன் இணைந்து ஒத்துழைப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் இவைகள் வெறும் தேர்தல் கால வாக்குறுதிகளைப் போன்று வார்த்தை ஜாலங்களுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டது. இவற்றையே ஏகாதிபத்தியவாதிகள் தமக்கு சாதகமாக பயன்படுத்தின

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 09 வது மாநாட்டில் தடம் பதிக்கும்

## அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கம்



காலைக் கதிரவன் மலைக் இடுக்களினூடே தனது கதிர்களை வீசிக் பனித்துளியை பரவசப்படுத்தும் அழகான வித்தையைக் காட்டினாற்போல் கண் விழக்கிறான். அவனது வருகையால் உறக்கத்தில் இருந்த பனித்துளிகள் மின்மினிப்பூச்சிளாக தம்மை வரிந்துக் கட்டிக் கொள்கின்றன... அது மட்டுமா இந்த கதிரவனை வரவழைப்பதற்காக காக்கைகளும் தமது வழமையான இசையை விட்டுவிடவில்லை. ஆம் தேனிக்களின் ரீங்காரமும் தான்.. தனது வழமையான பனியை தொடர்ந்த கதிரவன் நெட்டங்கின் சமநிலைக்கு தள்ளப்படவே மலையகம் முகில் கூட்டத்தை விலக்கி செவ்வான ஒளி வீச்சால் மலையக மாதாவும் விழித்துக் கொள்கிறாள். தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்பின் குசினிகளில் இருந்து வெண்ணிறம் கலந்த புகையோடு அவர்களின் வீடுகளில் இருந்த வானொலிப்பெட்டிகளின் வழமையான சுப்ரபாதமும் வெளிக்கிளம்பியது. தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்பான லயத்து மூளைகளில் சிலை சுவரொட்டிகள் அங்கும் இங்குமாக தோட்டத் தொழிலாளர்களின் 06 வது மாநாடு இது சுவரொட்டிகளின் சுலோகம் ஆனால் அதை தோட்டத் தொழிலாளர்களோ பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. ஏன்! சங்க சங்கதேகங்கள்தான் அலுக்கொரு சங்கம்... ஆனால் சில தோட்டத் தொழிலாளர்களோ வழமையைவிட தமது காலைக்கடமைக்கு மாறாக தமது கடமையை மாற்றிக் கொண்டிருந்தனர். காரணம் சிலருக்கு புரிய வில்லை. விடயமறிந்த சிலர் நக்கலும் செய்வதை விடவில்லை. வழமையான ஞாயிறு 20 தோட்டத் தொழிலாளர்களின் விடுமுறை நாளென்பதால்

அவர்களின் வழமையான நடவடிக்கைகள் அந்த சின்னஞ்சிறிய கூட்டத்தாரின் செயற்பாடுகளை வெளிக்காட்டவில்லை. கடும் மழை கால நிலை மாற்றம் பெறும் வித்தியாசமானதாய் அமைந்திருக்கவில்லை. நுவரெளியா மாவட்டத்தின் அட்டன் நகரம் தனது வழமையை மாற்றிக்கொள்ளாவிட்டாலும் மாறுதலுக்கான கதைகளைக் கொண்டிருந்தது. நகர தேனீர் கடைகளில்,சூரிய உதயத்துடன் திறக்கப்படும் அரசியல்வாதிகளின் அனுசரனையின் கீழ் இயங்கும் மதுபானக்கடைகளில் மாநாடு பற்றிய சில சில வார்த்தைகள் அட்டன் நகரம் தம்மை சிவப்பு ஆடைகளால் அலங்கரித்துக்கொண்டிருந்தது. அதுவும் மாறுதலின் அடையாளம்தான். வழமையைவிட மாநாடு பற்றிய சுவரொட்டிகள் தமிழிலும், சிங்களத்திலும், மாற்று தொழிற்சங்க தலைமைத்துவங்கள்கூட அவதானிக்கும் அளவுக்கு அட்டன் நகரம் தம்மை வரிந்துக்கட்டிக்கொண்டிருந்து. முற்பகல் 11.00 மணிக்கு அகில இலங்கை தோட்டத் தொழிலாளா் சங்கத்தின் தலைவர் தோழர் இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் மாநாடு ஆரம்பிக்கப்பட்டது. வெகுவான உற்சாகத்துடன் தொழிலாளர்கள் காணப்பட்டனர். தாம் பெரும்வெற்றியை கைப்பற்றி விட்டதைப் போன்ற உணர்வு அங்கு கூடியிருந்த தொழிலாளர்கள் வழமையைவிட தம்மை மாற்றிக்கொண்டிருந்தனர். பாரதியின் கவிதைகளில் சிங்களத்தையும் விட்டுவிடாததைப்போன்று தமிழ், சிங்கள மொழிகள் தோழமையுடனேயே ஒன்று கலந்து கீதமிசைத்தன. தோழர் இராமலிங்கம் சந்திர சேகர் அவர்கள் உரை தோட்டத்

7ம் பக்கம் பாாக்

# விவசாயிகளை சட்டியிலிருந்து அடுப்பில் தள்ளும் ராஜபக்ஸவின் வரவு – செலவு

2014 வரவு செலவுத் திட்டத்தில் கமத்தொழில் ஓய்வூதிய பெறுனர்களுக்கு இழைக்கப்பட்ட அநிதி பற்றி மக்களை விழிப்பூட்டும்
அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனம்

விவசாயிகளின் பிரச்சினைகள் தொடர்பாக அவர்களை விழிப்பூட்டுவதற்காக அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனம் வெளியிட்டுள்ள துண்டு பிரசுரம். பல தசாப்தங்களாக நமது கமத்தொழில் துறையில் தோன்றியிருக்கும் பிரச்சினைகளான, உற்பத்திகளுக்கு நியாய விலை கிடைக்காமை, விதைப்பதற்கு நல்லரக விதை நெல் கிடைக்காமை, கிருமி நாசினிகளின் விலையேற்றம், காட்டு யானைகளின் தொல்லை, வயதான விவசாயிகளுக்கு ஓய்வூதியம் வழங்கப்படாமை போன்ற பிரச்சினைகளால் நாம் கஷ்டமான காலத்தையே கடந்துக் கொண்டிருக்கின்றோம்.

தொடந்தும் சொல்லுவதென்றால், எமது பிள்ளைகளுக்கு நாட்டில் மிகவும் பின்தங்கிய நிலையிலான பாடசாலை. எமக்கு நாட்டில் வசதிகளில்லா வைத்தியசாலை. எமது கிராமத்திற்கு நாட்டில் மோசமான பாதைகள். இரவில் காட்டு யாணைகளின் தொல்லை. நமது விவசாயிகளுக்கு தீர்வின்றிய சிறுநீரக நோய், போன்ற பிரச்சினைகளால் சமூகத்தில் நாம் செல்லாக் காசாக வீசப்பட்டுள்ளோம். ஆனால் ஒரு தேசத்தின் பசியை போக்கும் விவசாயிகளான எமக்கு. வெற்றிபெற்ற யுத்தத்திற்கு இராணுவ வீரர்களை வழங்கிய மக்களான எமது இந்த சோகக் கதையை சொல்லாமல் இருக்க முடியவில்லை.

எமது உற்பத்திகளுக்கு உரிய விலை வழங்காது, எங்களிடமிருந்து கொள்ளையடித்தவற்றை உங்களுக்கு கொல்லை விலைக்கு விற்கின்ற, எங்களுக்கும் லாபமில்லாத உங்களுக்கு நன்மையில்லாத சந்தையை அமைத்திருக்கும் அரச விதை திணைக்களத்தை கம்பனிகளுக்கு விற்று வெளிநாடுகளிலிருந்து தரக்குறைவான விதைகளை இறக்கி அந்த விதைகளுக்கு கிருமி நாசனிகளையும இறக்கி உங்களுக்கு நோய் நொடிகளும் எங்களுக்கு வறுமையும் உரித்தாக்கியிருக்கும் ஆட்சியாளர்களில் புதிய வடிவிலான அரசாங்கமே 2005ல் உருவான ராஜபக்ஷ அரசாங்கமாகும். “வாய்க்காலனில் கைககழுவிக் கொண்டு வரம்புகளின் நடப்பவராக” கூறும் ராஜபக்ஷ எமக்கு வழங்கிய விவசாய ஓய்வூதியத்தை 2012 ஆண்டோடு 900 கோடி ரூபாய் வெற்றாகி விட்டதால் அதை நிறுத்தியது.

இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் எமக்கு உக்கிரமடைந்துள்ள 06 பிரச்சினைகளை கோரிக்கைகளாக சமா்பித்தோம். ஆனால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அதில் 5 கோரிக்கைகளை நிராகரித்துள்ளார். “கடவுளின் படையலை சாப்பிட்டது போல” விவசாயிகளுக்கு 60 வயதில் வழங்க வேண்டிய ஓய்வூதியத்தை 60 வயதிலிருந்து 63 வயதாக அதிகரித்து காவாலித்தனம் புரிந்துள்ளார்.

தற்போது விவசாயிகள் பரந்துவாழும் பிரதேசங்களில் சிறுநீரக நோய் வேகமாக பரவிவருவது யாவரும் அறிந்த விடயமாகும். ராஜபக்ஷவின் ஓய்வூதிய கொடுப்பனவை 63 வயதில் பெற்றுக்கொள்வதற்கு விவசாயிகள் மிஞ்சுவார்களா என்பதே இன்றைய கேள்வியாகும். ஏனென்றால் 18 வயது இளம் விவசாயிகள் கூட சிறுநீரக நோயால் பீடிக்கப்பட்டுள்ளனர். 60 வயதில் வழுங்குவதாக உறுதியளித்த ஓய்வூதியத்தை 63 வயதாக அதிகரித்த மகிந்தவின் விளையாட்டானது நாட்டின் பசியை போக்குவதற்காக நெற் கதிரையும், மரக்கறி, பழவகைகள், சோளம் உள்ளிட்ட அனைத்தையும் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கேயாகும். இந்நாட்டில் நச்சு உணவுகளை உட்கொள்வோராக எமக்கு இழைக்கப்பட்டிருக்கும் அநீதிக்கு எதிராக உங்களது குரலையும் எமக்காக எழுப்ப வேண்டியிருக்கிறது. உங்களது குரல் எமது சக்தியாகும். நாளை, உங்களதும், உங்களது பிள்ளைகளினதும் பசியை போக்குவதற்கான இந்த அரும்பணியை தொடர்வதற்காக எமக்காக உங்களது குரலை ஓங்கச் செய்யுங்கள். எம்மிடமிருந்து பறிக்கப்பட்ட ஓய்வூதிய பணத்தை பெற்றுக் கொள்வதற்காக இரண்டு கோரிக்கைகை உள்ளது.



01. கமக்காரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் வயது 60 இருந்து 63 ஆன அதிகரிப்பை உடனடியாக இரத்துச் செய்!

02. கமக்காரர்களின் நிலுவையான ஓய்வூதியத்தை செலுத்துவதற்கு நிதி ஒதுக்கு!


இம்முறை வரவு செலவில் இந்த 2 கோரிக்கைகளை வென்றெடுப்பதற்காக நீங்கள் உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பை எமக்கு வழங்குங்கள்.

**”கமக்காரா் ஓய்வூதியம் வழங்கும் வயது 60 இருந்து 63 ஆக அதிகரித்ததை உடனடியாக இரத்துச் செய்!**

**அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5ம் பக்கத் தொடர்...சோக்கம் மாநாடும்



இலங்கைக்கு எதிராக முன்வைக்கவிருந்த பிரேரணையை தடுப்பதற்காக இலங்கையின் நட்பு நாடுகளின் ஆலோசனையின் படி இலஙகையில் (13 நாடுகளின் கையொபப்த்துடன்) மே 22ம் திகதி முன்வைக்கப்பட்டது. அதன் மூலம் மனித உரிமைகளை பாதுகாப்பதாகவும் அது பற்றிய உள்ளக விசாரணை நடத்துவதாகவும் ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் இணைந்து செயற்படுவதாகவும் இலங்கை உறுதியளித்தது. இதேவேளை இந்நாட்களில் ஐ.நா செயலாளர் பான் கீ மூன் இலங்கைக்கு விஜயம் செய்து வடபகுதிை-யயும் பார்வையிட்டார். விஜயத்தை முடித்துக் கொண்ட பான் கீ மூன் இலங்கையிலிருந்து வெளியேறுவதற்கு முன்னர் 2009 மே 23ம் திகதி இலங்கை அரசாங்கத்துடன் சேர்ந்து கூட்டறிக்கையில் கைசாத்திட்டார். அதில் “சர்வதேச மனித உரிமை நிலைமைகளுக்கேற்ப மனித உரிமை-களை பாதுகாப்பதற்கும் மற்றும் மனித உரிமை ஆணைக்குழுவுடன் இணைந்து ஒத்துழைப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் இவைகள் வெறும் தேர்தல் கால வாக்குறுதிகளைப் போன்று வார்த்தை ஜாலங்களுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டது. இவற்றையே ஏகாதிபத்தியவாதிகள் தமக்கு சாதகமாக பயன்படுத்தின

4ம் பக்கத் தொடர்...இளைஞர்




சுதந்திரமடைந்தாக வேண்டும். நாட்டில் சிறைக்கைதிகளில் 65 வீதமா-னார் இளைஞர் யுவதிகளாகும். அதற்கானகாரணம் அவர்களுக்கு கல்வி, சரியான தொழிலின்மையாகும். விளையாட்டுத் துறையிலும் சுதந்திரமில்லை. விளையாட்டு முழுமையாக ராஜபக்ஷ மயமாக்கப்பட்டுள்ளது. நமது நாட்டில் போதைவஸ்து, தொல்லை அதிகரித்துள்ளது. அண்மையில் 260கி-லோ போதைவஸ்து கைபப்ற்றப்பட்டது. சிலவேளை இந்த 260 கிலோ போதை வஸ்த்தையும் சந்தைக்கு வினியோகிக்கப்பட்டுள்ளதா என்ற சந்தேகம் எமக்கிருக்கிறது. அண்மையில் அத்துருகிரிய பிரதேசத்தில் அவ்வாறான சம்பவம் இடம்பெற்றுள்ளது. அதனால் இந்த போதைவஸ்த்துகளிலருந்து இளைஞா் யூவதிகள் மீளவேண்டும். மீட்க வேண்டும். வடபகுதி இளைஞர்களுக்கு அவ்வாறான பல பிரச்சினைகள் உள்ளன.குறைந்தபட்சம் வட-பகுதி இளைஞர்களுக்கு இராணுவத்தின் அனுமதியின்றி ஒரு கிரிக்கட்போட்டியை கூட ஏற்பாடுச் செய்ய முடியாதிருக்கிறது. அதேபோன்று அரசாங்க தொழி லிலீடுபடும் பட்டதாரிகளுக்கு அரசியல்வாதிகளின் கைகூலிகலாக செயற்படும் அபாக்கிய நிலை தோன்றியுள்ளது. நமது நாட்டு இளைஞா, யுவதிகள் பின்தங்கிய மனநிலையிலிருந்து விடுபடவேண்டும். அவர்களில் பெருமதிரளானே-ார் கோயில், பள்ளிகளை நாடுகின்ற, மந்திரம்,சாஸ்த்திரத்தை நம்புகின்ற, சீதனத்தின் பின்னால் ஓடுகின்றவர்களாக மாறியுள்ளனர், நமது நாட்டு ஊடகங்கள் மணிக்கணக்காக போலியான எண்ணங்களை விதைக்கிறது. நாட்டில் மேட்டுகுடியை சார்ந்த சாஸ்த்திரக்காரர் ஒருவர் சொன்ன பொய்யை மறைப்பதற்காக இப்போதுபெரு முயற்ச்சிகள் எடுக்கப்படுகின்றன. கதிர்காம கடவுள் பற்றி கூறிய பொய்யின் காரணமாக கதிர்காம கட-வுளை பார்ப்பதற்கு பெரும்திரளானர், திரண்டனர், நமது நாட்டு இளைஞர்கள் ஐ போன்களை பாவித்தப்போதிலும் மூடநம்பிக்கையிலான மனோபாவங்களிலிருந்து மீளவில்லை. மூடநம்பிக்கையிலான கருத்துக்களை பரப்பும் ஊடகங்கள் அவர்களுக்கு விஞ்ஞான ரீதியானஅறிவை பெற்றுக் கொடுப்பற்கான நேரத்தை ஒதுக்குவதில்லை. அதனால் இளைஞார் யுவதிகளின் சுதந்திரத்தை வென்றெடுப்பதற்காக எமக்கு போராட்டமொன்று இருக்கிறது. நமது நாட்டு அரசியல் தலைமைத்துவத்திற்கு சாதாரண குடும்பங்களின் இளைஞர், யுவதிகளுக்கு சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. நாட்டில் பெரும் அரசியல்வாதிகளின் பிள்ளைகளுக்குத்தான் அந்த சந்தாப்பம் கிடைக்கிறது. அதன-ால் இந்த நடைமுறையை மாற்றியமைக்க தமது உரிமை-களை வென்றெடுக்ககட்சி நிற, பேதங்களின்றி அணிதிரளும்படி நாம் இளைஞர்கள் யுவதிகளிடம் கேட்டுக் கொள்கினறோம்.

நாம் இளைஞர் யுவதிகளிடம் செய்தியொன்றை கொண்டுச்செல்ல எதிர்பார்க்கின்றொம்.அதேபோன்று அராங்கத்தை வற்புறுத்துகின்றோம். எதிர்வரும்வரவு செலவுத் திட்டத்தை இலக்காக கொண்டு பல முன்மொழிவுகளை முன்வைக்க இருக்கின்றோம்.உயர்தரத்தில் சித்தியடைந்த இளைஞர் யுவதிகளை பெரும்திரளாக உள்ளடக்கியவாறு அரச பல்கலைக்கழகமொன்று அமைப்பதற்கு இந்த வரவு செலவுத் திட்டத்தில்நிதி ஒதுக்க வேண்டுமென நாம் அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம். அதேபோன்று மகிந்த சிந்தனை பத்தாண்டுத் திட்டத்தில் கூறப்பட்டுள்ளவாறு தொழிலின்றி இருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு கொடுப்பவொன்றை வழங்குவதற்காக வருடமொன்றுக்கு 800 மில்லியன்ஷரூபாய் நிதி ஒதுக்குவதாக கூறியது. ஆனால் இதுநாள் வரையில் எவருக்கும் அந்த கொடுப்பனவுகள் கிடைக்கவில்லை. அதனால் இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் அதற்கான நிதியை ஒதுக்கும்படி நாம் அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்.

அதேபோன்று நமது நாட்டு இளைஞர் யுவதிகளுக்கு பகிரங்கமான அறைக்கூவல் விடுக்கின்றோம். “சுதந்திரத்திற்காக இளைஞர்களின் பயணத்துடன்” இணைந்து தோழர் சேகுவேராவின் படத்தை போன்றே இதயத்தாலும் கவரப்படுவீர்களாக. இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் சோஷலிச இளைஞர் சங்கத்தின் தேசிய குழு உறுப்பினர்களான தோழர் எரங்க குணசேகர, தோழா். அமிலபெத்தும் ஆகியோரும் கலந்துக் கொண்டனர்.

6ம் பக்கத் தொடர்...09 வது

தொழிலாளர்களை தட்டியெழுப்பியது. ராஜபக்ஸ ஆட்சியாளர்களின் வக்கிரம் கொடுமை, கொடுங்கோலாட்சி பிழை-யான பொருளாதார கோட்பாடு அடி-வருடி அரசியல் போன்றவற்றையும் ஏகாதிபத்திய சார்பு நிலையையும் பற்றி உரை நிகழ்த்தினார். அத்துடன் தோட்டத் தொழிலாளர்களை பிரதிநிதித்துவம் படுத்தும் தொழிற்சங்கங்களையும் சாடினார். தொழிலாளர்களின் ஆரவாரம் மிகவும் உற்சாகமாகவே இருந்தது.

அவரின் உரை நிறைவைத் தொடர்ந்து அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் நிகழ்ச்சி நிரழின்படி 2014ம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபையினரை தெர-ிவு செய்யும் நிகழ்வு நடைபெற்றது. தோழர் இராமலிங்கம் சந்திரசேகர் தலைவராவும், தோழர் பிரேமரத்ன செயலாளராகவும், தோழி கலைச்செல்வி பொருளாளராகவும் சபையோரால் தெரிவு செய்யப்பட்டதோடு நிறைவேற்று குழு உறுப்பினர்கள் தெ ரிவு செய்யப்பட்டனர்.

அடுத்தகட்டமாக 2014ம் ஆண்டை முன்னிலைப்டுத்தி தோட்டத் தொழிலாளர்களுக்கான சில பிரேரனை-கள் முன்வைக்கப்பட்டன.

**1) தோட்டத் தொழிலாளர்களுக்கு மாதச்சம்பளத்தை ஏற்பாடு செய்**

**2) தோட்ட மக்களுக்கு வீடுகளையும், காணிகளையும் வழங்கு**

**3) தோட்ட பிள்ளைகளின் கல்வி வசதி—களை அதிகரித்துக்கொடு**

**4) தோட்ட மக்களின சுகாதார வசதிகளை விரிவுபடுத்து**

**5) தோட்ட இளைஞர்களுக்கு அரசாங்க உத்தியோகத்தை வழங்கு**

என்பன தோட்டத் தொழிலாளர்களின் சார்பான உரிமைகளோடு நலன்புரி திட்டங்களாக தோட்டத் தொழிலாளர்களுக்கு மரணாதார திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதில்

**குறிப்பிட்ட அங்கத்தவருக்கு ரூபா 15000.00 குறிப்பட்ட அங்கத்தவரால் குறிப்பிடப்படும் மூவருக்கு தலா 5000 ரூபாவும், புற்றுநோய் மற்றும், காச நோய் என்பவற்றுக்கு தலா 5000 வீதம**

வழங்குவதற்கு மாநாடு ஏகமானதாக முடிவெடுத்தது.

தோட்டத் தொழிலாளர்கள் இன்று கொத்தடிமைநிலையிலிருந்து நவின அடிமைத்தனத்திற்கு தள்ளப்பட்டிருக்கும் இவ்வேளையில் நாளை அவர்களின் இருப்புக்கு பாரிய சவால் ஏற்படலாம் அத்தோடு இன்று முதலாளித்துவம் எல்லாவற்றையும் ஒட்டு மொத்தமாகவும் சுரண்டி மனிதர்களின் சிந்தனைகளையும் சுரண்டிக்கொண்டிருக்கும் நேரத்தில் தனக்கு சார்பான கருத்துக்களையும், தனக்கு சார்பான அரசியல் தலைவர்களையும் சமுகமயமாக்கும் தருனத்தில் உழைக்கும் வர்க்கம் தாம் இழப்பதற்கு எதுவுமே இல்லை தாம் உழைப்பைத் தவிர என்ற மனோ நிலையை மாற்றியமைப்பதற்காகவும் உரிமைகளை வென்றெடுப்பதற்காகவும் அவற்றை பாது காப்பதற்காகவும் இன்றைய முதலாளித்துவ ஆட்சியாளர்களுக்கு அழுத்தம் கொடுக்கிறது. அகவே இன்று தோட்டத் தொழிலாளர்களுக:கு எஞ்சியிருப்பது ஒன்று மட்டுமெயாகும் அதாவது உரிமைகளை முதலாளித்துவம் ஒருபோதும் வெறு-மனே வழங்காது போராடித்தான் பெற வேண்டுதம். பெற்றாக வேண்டும் போராட்டம்தான் உழைக்கும் வர்க்கத்தின் ஒரேயொரு பிரதான ஆயுதமாகும். போராட்டமின்றேல் வெற்றியில்லை. வெற்றியின் ஆரம்பம் போராட்டம்.

3ம் பக்கத் தொடர்...ராஜபக்ஷ

விசாரணை இறுதியில் குற்றவாளியாக காணப்படுமவரையில் அவர் குற்றவாளியாக அல்ல, சந்தேக நபராக கருதுவது முதலாளித்துவ ஜனநாயகத்திலும் முதலாளித்துவ சட்டத்தினதும் அடிப்படை சித்தாந்தமாகும். அது அப்படி அமைந்திருப்பது குற்றமிளைக்காதோர் தண்டனை பெறும் ஆபத்திலிருந்து தவிர்ப்பதற்காகும். இப்போது ராஜபக்ஷ அரசாங்கம் முழுமையாக இப்போது அந்த அடிப்படை சித்தாந்தத்திற்கும் ஆப்பு வைத்துள்ளது. அது ஜனநாயகத்திற்கும் மனித உரிமைகளுக்கும் அதேபோன்று அப்பாவி மக்களின் பாதுகாப்பிற்கும் பாா-ிய அச்சுறுத்தலாகும். இது, பொய்யான குற்றசாட்டுகளை சுமத்தி தனது எதிராளி-களை கொன்று அரச விரோதிகளையும் வேட்ண்டயாடும் எதிர்கால நடவடிக்கைகளின் முன்னேற்பாடாகும். அதனால் “பெ-ாலிஸ் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் சந்தேக நபர்களின் இறப்பு” சாதாரணமாக மௌனித்திருக்க வேண்டிய விடயமாக கரு-தாது அதற்கு எதிராக மக்கள் கருத்தை கட்டியெழுப்புவதற்கும் அதை தடுப்பதற்கும் ஜனநாயகத்தை நேசிக்கின்ற, மனித உரிமைகளை பாதுகாக்க வேண்டுமென சிந்திக்கும் அனைவரும் ஓரணியில் திரண்டாக வேண்டும்.

3ம் பக்கத் தொடர்...ராஜபக்ஷ



இயக்கம் எரிபொருள் மானியம் மீன்படி உபகரணங்கள் விலைகளை குறைக்குமபடி கேட்டிருந்தனர். வி-வசாயிகள் நெல்லுக்கு நியாய விலையை கேட்டனர். மாணவர்கள் விரிவுரையாளர்கள் கல்விக்கான நிதியை அதிகரிக்கும்படி கேட்டனர். தனியார் துறை ஊழியர்களுக்கு சம்பளத்தை அதிகரிக்கும்படி கேட்டனர். ஆனால் இவைகள் எதனையும் பெற்றுக் கொடுக்கவில்லை. ஆனால் ஜனாதிபதி சம்பூரில் கெயான் நிறுவனத்திற்கும் ஜோன் பெக்கருக்கு வரிச் சலுகை வழங்கியுள்ளது. மக்களுக்கு எதுவும் கிடையாது. ஜனாதிபதி நாட்டின் பொருளதாரமும் அதன் வருமா-னம் அனைத்தும் தனது குடுபத்திற்கு அவரது உறவினர்களுக்கு மட்டுமே என்ற நினைத்துக் கொண்டிருக்கிறார். அது பாரிய தவறாகும். நாட்டின் சொத்துகள் அனைத்தும் மக்களுக்கே சொந்தமாகும். தோழர் அனுர திசாநாயக்க குறிப்பிட்டார். இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் ஜே.வி. பி யின் பிரச்சார செயலாளர் தோழர் விஜித ஹேரத் மற்றும் மத்திய குழு உறுப்பினர் தோழர் நலிந்த ஜயதிஸ்ஸ அவர்களும் கலந்துக் கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24வது கார்த்திகை வீர்கள் ஞாபகார்த்தம் பெருமையுடன் நினைவுகூறப்பட்டது



24வது கார்த்திகை வீர்கள் ஞாபகார்த்தம் நவம்பர் 13ம் திகதி மாத்தறை கடற்கரை பூங்காவில் வெகு விமரிசையாக நினைவு கூறப்பட்டது. ஜே.வி.பி தலைவர்கள், அங்கத்தவர்கள் மற்றும் பெரும்திரளான ஆதரவாளர்களுடன் நடைபெற்ற இந்த ஞாபகார்த்த கூட்டத்தின் இறுதியில் தியாகிகள் நினைவு கீத நிகழச்சியை சோஷலிச கலைச் சங்கம் வெகு சிறப்பாக ஏற்பாடுச் செய்திருந்தது

## மரணிக்காத கட்சியையே தோழர் விஜேவீர உருவாகிகினார்

### ம.வி.மு.தலைவர் தோழர் சோமவன்ச அமரசிங்க


ஜே.வி.பி தலைவர் தோழர் சோமவன்ச அமரசிங்க

மக்கள் விடுதலை முன்னணி, விவசாயிகளின், மாணவர்களின் மற்றும் உழைக்கும் மக்களின் கட்சியாக தோழர் விஜேவீராவால் உருவாக்கப்பட்டிருப்பது, எதிரிகளால் அழித்தொழிக்க முடியாத, எந்தவொரு சவாலுக்கும் முகம்கொடுக்க கூடிய கட்சி ஜே.வி.பி யென இப்போது நிருபணமாகியுள்ளது என்று தோழர் சோமவன்ச தெரிவித்தார்.

அவர் இதை கடந்த 13 ம் திகதி மாத்தறை கடற்கரை பூங்காவில் இடம்பெற்ற 24வது கார்த்திகை வீரர்கள் ஞாபகார்த்த கூட்டத்தில் உரையாற்றும்போதே இதை தெரிவித்தார்.

தோழர் ரோகண விஜேவீரர் மரணத்தை எதிர்கொண்டிருந்த தருணத்தில் கட்சிக்கு பாடம் கற்பித்த உன்னத தலைவராக திகழ்ந்தார் எனக் குறிப்பிட்ட தோழர் சோமவன்ச, எதிரிகள் தோழர் விஜேவீராவின் இறந்த உடலை கண்டு அஞ்சி அவரது உடலை எரித்து சாம்பலாக்கிய போதிலும் தோழர் விஜேவீராவின் நாமம் அமரத்துவமானதெனவும் அதை எதிரியால் அழித்தொழிக்க முடியாதென்றும் சுட்டிகாட்டினார்.

"ராஜபக்ஷ அரசாங்கத்தால் நாட்டில் செய்துக்கொண்டிருக்கும் காட்டுமிராண்டித்தனத்தை முடிவு கட்டியாக வேண்டும். அவைகளை தடுத்து நிறுத்த, தோல்வியடையச் செய்ய முடியும். அந்த தகமை எமக்கிருக்கிறது. இந்நாட்டின் தொழிற்சாலை உரிமையாளர்கள், வர்த்தகர்கள், விவசாயிகள், மீனவர்கள் உற்பத்தியில் தமக்குரிய இடத்தை பெற்றாக வேண்டும். அனைவரும் ஒரே நோக்கத்துடன் அணிதிரண்டாக வேண்டும். அமைப்பு ரீதியாக அணிதிரள்வதற்கு, போராடுவதற்கு, தோழர் ரோகண விஜேவீர சென்ற பாதையில் செல்வதற்கு, அவர் சுமநதிருந்த பதாகையை ஏந்த அணிதிரளுங்கள். என மக்களிடம் தோழர் சோமவன்ச அமரசிங்க கேட்டுகொண்டார்.



## அனைத்தையும் பரீட்சித்துப் பார்க்கும் மக்கள் இறுதியாக ஜே.வி.பி.யை நோக்கி வருவார்கள் என்ற நம்பிக்கை எமக்கிருக்கிறது

### ம.வி.மு. பிரதான செயலாளர் தோழர் டில்வின் சில்வா

மக்கள் விடுதலை முன்னணியின் அரசியலில் கஷ்டமான நிமிடம் முடிவுக்கு வந்துள்ளது. ஆனால், மக்கள் சமூக அரசியல் மாற்றத்திற்காக ஜே.வி.பியோடு திரள்வார்களென்று தாம் நம்பவில்லையென்றும் அனைத்தையும் பரீட்சித்துப் பார்க்கும் மக்கள் இறுதியாக ஜே.வி.பியிடம் வருவது தவிர்க்க முடியாதென பொதுச் செயலாளர் தோழர் டில்வின் சில்வா தெரிவித்தார்.

"ஒரு நோயாளிடம் வைத்தியர் சத்திர சிகிச்சை செய்ய வேண்டுமென்று கூறும்போது அவர் அதைக் கண்டு பயந்து, போதிபூஜை, கோயில்களில் காணிக்கை, நாட்டு வைத்தியர் என அழைந்து திரிவார். ஆனால் அவைகளின் எதிலும் பயனளிக்காதபோது இறுதியாக மீண்டும் வைத்தியரிடம் வந்து சத்திர சிகிச்சைக்கு இணக்கத்தை தெரிவிப்பார். அதேபோன்று எமக்கு இன்று செவிமடுக்காதோர் நாளை செவிமடுப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கிருக்கிறது. எனத் தெரிவித்தார்.

நாட்டில் பொரளாதார, அரசியல், மற்றும் சமூக நெருக்கடி பாரிய வீழ்ச்சியை நோக்கி நகர்ந்த வண்ணமுள்ளது. எவருக்கும் அரசியலில் இருந்து விலகி வாழ்க்கையை தனியாக வெல்ல முடியாதெனவும் சுட்டிகாட்டிய தோழர் டில்வின் சில்வா வெற்றிபெறுவதற்கு ஒரே வழி இருப்பதாகவும் அது அனைவருக்குமான சோஷலிசம் எனத் தெரிவித்தார். "ஜனாதிபதி ராஜபக்ஷா ஒரு அபூர்வமான திட்டத்தை நோக்கியே நகர்ந்துக் கொண்டிருக்கிறார். போற போக்கு நல்லதல்லவென எம்மைவிட அவருக்கு நன்றாகத் தெரியும். எதிர்காலத்தில் அரசாங்கம் பாரிய நெருக்கடியை நோக்கியே நகருமென்றும், ஜே.வி.பி அதற்கு எதிராக மக்களை தெளிவுபடுத்தி அணிதிரட்டிக் கொண்டிருக்கிறென்பதும் அவருக்குத் தெரியும். அதனால் காலம் கடக்கும் முன் ஜனாதிபதித் தேர்தலை நடத்தி அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்வதற்கு அவர் எண்ணியுள்ளார். ராஜபக்ஷ ஆட்சி மக்கள் விரோத சர்வாதிகார குடும்ப ஆட்சியை நோக்கி வளர்சியடைந்துக் கொண்டிருக்கிறது.

ஜே.வி.பி நேரத்துடனே ஆபத்தை காண்கிறது. அதனால் மக்களை பாதுகாப்பதற்கும் பொருளாதார, அரசியல் ரீதியாக ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டவும் மக்கள் விடுதலை முன்னணி தயார். அவசரமான தேர்தலை நடத்தி ராஜபக்ஷ சர்வாதிகார பாத்திரத்திற்கு தயாரானபோதிலும் உலகத்தில் எல்லா சர்வாதிகாரிகளும் சென்ற பாதையான வரலாற்றில் குப்பை கூடத்தை பெற்றுக் கொடுக்க நாம் தயார்" என தோழர் டில்வின் சில்வா தெரிவித்தார்.



இல 198/19 கொழும்பு 10ல் வசிக்கும் டில்வின் சில்வா அகிய என்னால் இல 43/43 வலவுவத்த வீதி தெல்கந்த நுகேகொடை சரளா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org